इंडियनऑयल
IndianOil

Bharat Petroleum

हिन्दुस्तान पेट्रोलियम
HP

# LPG விநியோகஸ்தர்கள் நியமனத்திற்கான அறிவிப்பு விளம்பரம்/மறு விளம்பரம்

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் (IOCL), பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (BPCL) மற்றும் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (HPCL) பல்வேறு பிரிவுகளின் கீழ், தமிழ்நாடு மாநிலத்தில், LPG விநியோகஸ்தர்களை நியமிக்க, கீழ்கண்ட அமைவிடங்களில் குறிப்பிட்டுள்ள வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கின்றது.

**அட்டவணை - A**

| வ. | எண்ணெய் நிறுவனம் | அமைவிடம் | கிராம பஞ்சாயத்து | வட்டாரம் (Block) | மாவட்டம் | பிரிவு** | சந்தையின் பிரிவு* (Type of Market) | வைப்புத்தொகை (Rs. In Lakhs) | சந்தைப்படுத்தும் திட்டம் (Marketing Plan) | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | IOC | கதனநகரம் | கதனநகரம் | ஆர். கே. பேட்டை | திருவள்ளூர் | OBC | கிராமின் வித்ரக் | 3 | 2017-18 | Re-advt |
| 2 | IOC | மணலூர் | மணலூர் | ஆத்தூர் | திண்டுக்கல் | OPEN | கிராமின் வித்ரக் | 4 | 2017-18 | Re-advt |
| 3 | IOC | ஆத்தூர் | N/A | ஆத்தூர் | திண்டுக்கல் | OPEN(W) | ரூர்பான் வித்ரக் | 5 | AGAINST. TERMINATION | |
| 4 | IOC | ஊட்டி | N/A | உதகமண்டலம் | நீலகிரி | OPEN(GP) | ரூர்பான் வித்ரக் | 5 | AGAINST. TERMINATION | Re-advt |
| 5 | BPC | காவாலிப்பட்டி | காவாலிப்பட்டி | திருவோணம் | தஞ்சாவூர் | SC | கிராமின் வித்ரக் | 2 | GRAMIN | Re-advt |

**அட்டவணை - B**

| வ. | எண்ணெய் நிறுவனம் | அமைவிடம் | கிராம பஞ்சாயத்து | துணை பிரிவு (Sub Division) | வட்டாரம் (Block) | மாவட்டம் | பிரிவு** | சந்தையின் பிரிவு* (Type of Market) | வைப்புத்தொகை (Rs. In Lakhs) | சந்தைப்படுத்தும் திட்டம் (Marketing Plan) | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | IOC | நொடியூர் | நொடியூர் | புதுக்கோட்டை | கந்தர்வக்கோட்டை | புதுக்கோட்டை | OPEN | DKV | 4 | 2017-18 | Re-advt |
| 2 | IOC | துலையாநத்தம் | துலையாநத்தம் | முசிறி | தாத்தையங்கார்ப் பேட்டை | திருச்சிராப்பள்ளி | OBC | DKV | 3 | 2017-18 | Re-advt |
| 3 | HPC | டி எடையாபட்டி | டி எடையாபட்டி | கடவூர் | கடவூர் | கரூர் | OPEN | DKV | 4 | 2017-18 | Re-advt |
| 4 | BPC | மல்லல் | மல்லல் | சிவகங்கை | காளையார்கோயில் | சிவகங்கை | OBC | DKV | 3 | 2017-18 | Re-advt |

*** DKV - துர்கம் ஷேத்திரிய வித்ரக்**
**பிரிவுகளின் விளக்கங்கள் கீழ்வருமாறு

Open - பொது பிரிவு. SC/ST - ஷெட்யூல்ட் வகுப்பு/ஷெட்யூல்ட் பழங்குடியினர் பிரிவு, Open(GP) - பொதுப் பிரிவைச் சேர்ந்த இராணுவம், மத்திய/மாநில அரசு மற்றும் மத்திய/மாநில பொதுத்துறையைச் சேர்ந்த பணியாளர்கள், OPEN(W) பொதுப் பிரிவைச் சார்ந்த பெண்கள்.

1. LPG விநியோகஸ்தர் தேர்வுக்கான விரிவான விபரங்கள், விரிவான தகுதி, அடிப்படை மற்றும் LPG கிடங்கு உள்கட்டமைப்புக்கான இடம் LPG Godown Land/ LPG Godown/Showroom/Showroom Land வீட்டிற்கு எரிவாயு சிலிண்டர்கள் கொடுப்பதற்கான கட்டமைப்பு முதலியவை இதற்குண்டான விவரங்கள், தேர்ந்தெடுப்பதற்கான நடைமுறை LPG விநியோகஸ்தர்களை தேர்ந்தெடுத்தல் முதலியன பற்றிய விவரங்களை நிறுவனத்தினுடைய இணையதளமான **www.local.com, www.ebharatgas.com, www.bharatpetroleum.in, www.hindustanpetroleum** ஆகிய இணையதளங்களில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் தேர்வு முறை உள்ளடக்கிய விவரங்கள் விளக்க கையேட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. விளக்க கையேட்டை **www.lpgvitarakchayan.in** என்ற இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

2. விண்ணப்பிக்க தகுதியுடைய அனைவரும் மேற்குறிப்பிட்ட ரூர்பான் வித்ரக், கிராமின் வித்ரக், துர்காம் ஷேத்திரிய வித்ரக் (எது ஏற்புடையதாக உள்ளதோ) அவர்கள் நிறுவனத்தினுடைய இணையதளத்தில் அதனுடைய இணையதளமான **www.lpgvitarakchayan.in**இல் பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்தபின் அவர்கள் மேற்கொண்டு தேவைப்படும் விவரங்களை பூர்த்தி செய்ய வேண்டும். விண்ணப்பங்களை **24.09.2018**-ம் தேதி **17.00** மணிக்கு முன் இணையதளத்தின் மூலமாக அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அனுப்புவதற்கு முன்னால் தங்களுடைய பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம், தங்களுடைய கையெழுத்து முதலியவற்றை தனித் தொகுப்பாக பதிவேற்றம் செய்யவும் மேலும், திரும்பப் பெற முடியாத விண்ணப்ப கட்டணத்தை Internet Banking/Credit Card/Debit Card வழியாக செலுத்தவும் நிறுவனத்தின் இணையதளமான **www.lpgvitarakchayan.in** ல் வசதி உண்டு. ரூர்பன் வித்ரக், துர்காம் ஷேத்திரிய வித்ரக் மற்றும் கிராமின் வித்ரக் அமைவிடங்களுக்கான திரும்பப் பெற முடியாத விண்ணப்பத் தொகையானது கீழ்க்கண்ட அட்டவணை-1 மற்றும் 2 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1 - ரூர்பன் வித்ரக் அமைவிடங்களுக்கான திரும்பப் பெற முடியாத விண்ணப்பத் தொகை**

| பிரிவு | திரும்பப் பெற முடியாத விண்ணப்ப கட்டணத் தொகை |
|---|---|
| OPEN | ரூ. 10,000 (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)[#] |
| OBC | ரூ. 5,000 (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) |
| SC/ST | ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்) |

[#]விளம்பரத்தில்/அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூர்பன் வித்ரக் அமைவிடங்களின் பொதுப் பிரிவின் கீழ் விண்ணப்பிக்க விரும்பும் SC/ST விண்ணப்பதாரர்கள், திருப்பித் தரப்பட மாட்டாத விண்ணப்ப கட்டணம் ரூ. 3,000/- (ரூபாய் மூவாயிரம் மட்டும்) செலுத்த வேண்டும். அவர்கள் விண்ணப்ப எண் உரிய SC/ST சான்றிதழ் எண் குறிப்பிட வேண்டும். அவை சரி பார்க்கப்படும். இந்திய அரசின் ஆன்லைன் பதிவேடுகளில் சரி பார்க்கும்போது, தரப்பட்ட தகவல்கள் பொருந்தாவிட்டால், விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

இருப்பினும், விண்ணப்பதாரர்கள் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவில் இருந்து பொதுப் பிரிவுக்கு விண்ணப்பித்தால் பொதுப் பிரிவு விண்ணப்பதாரர்கள் போல் அவர்களும் திரும்பப் பெற முடியாத விண்ணப்பக் கட்டணம் செலுத்த வேண்டும்.

**அட்டவணை 2 - கிராமின் வித்ரக் மற்றும் துர்காம் ஷேத்திரிய வித்ராக் அமைவிடங்களுக்கான திரும்பப் பெற முடியாத விண்ணப்பத் தொகை**

| பிரிவு | திரும்பப் பெற முடியாத விண்ணப்ப கட்டணத் தொகை |
|---|---|
| OPEN | ரூ. 8,000 (ரூபாய் எட்டாயிரம் மட்டும்)[##] |
| OBC | ரூ. 4,000 (ரூபாய் நான்காயிரம் மட்டும்) |
| SC/ST | ரூ. 2,500 (ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) |

[##]பொதுப் பிரிவில் கிராமின் வித்ரக் மற்றும் துர்காம் ஷேத்திரிய வித்ரக்-இன் கீழ் விண்ணப்பிக்கும் ஷெட்யூல்ட் வகுப்பு/ஷெட்யூல்ட் பழங்குடியினர் பிரிவு சாா்ந்தவர்கள் விளம்பரம் மற்றும் அறிவிப்பில் கண்டுள்ளபடி திரும்பப் பெறமுடியாத விண்ணப்ப கட்டணத் தொகையான ரூ.2500/- (இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) செலுத்த வேண்டும். விண்ணப்பதாரர்கள் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவில் இருந்து பொதுப் பிரிவுக்கு விண்ணப்பித்தால் பொதுப் பிரிவு விண்ணப்பதாரர்கள் போல் அவர்களும் விண்ணப்பக் கட்டணம் செலுத்த வேண்டும்.

3. விண்ணப்பதாரர்கள் இதற்காக கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கக் கையேட்டைப் படித்து தெரிந்து கொள்ளலாம். விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய விளக்கக் கையேட்டை கவனமாகப் படிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும் முன்பு **www.lpgvitarakchayan.in** என்ற இணையதளத்தில் உள்ள விளக்கக் கையேட்டை கவனமாகப் படித்து தெரிந்து கொள்ளவும்.

4. விண்ணப்பத்தை அனுப்பிய பின்பு, எந்த அலுவலகத்திற்கும் இதற்கான அத்தாட்சியாக எதையும் (கேட்கப்பட்டால் ஒழிய) அனுப்பத் தேவையில்லை. பின்னர், விண்ணப்பதாரர்கள் குலுக்கலில் தேர்வு செய்யப்பட்டால் மட்டும் அவர்கள் கள ஆய்வின்போது பரிந்துரைக்கப்பட்ட தகுதி சான்றிதழ்களை பரிசோதிக்க அனுப்பி வைத்தால் போதும். விண்ணப்பதாரர் இராணுவப் பிரிவின் அடிப்படையில் விண்ணப்பத்தை சமா்ப்பிப்பவர் ஆக இருந்தால் டைரக்டரேட் ஜெனரல் ரீசெட்டில்மெண்ட் (DGR) இடம் இருந்து பெறப்பட்ட தகுதி சான்றிதழை, கள ஆய்வின் போது சமா்ப்பிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு விளக்கக் கையேட்டை பார்க்கவும்.

**5. பொது**

a. எந்தவொரு காரணத்தையும் கூறாமல் மேற்குறிப்பிட்ட விளம்பரத்தை ரத்து செய்ய/திரும்பப் பெற/திருத்தி அமைக்க அல்லது கடைசி நாளை நீட்டிக்க இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் மற்றும் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கு முழு அதிகாரம் உண்டு.

b. விண்ணப்பதாரர், ஒரு அமைவிடத்திற்கு ஒரே ஒரு விண்ணப்பத்தைமட்டுமே சமா்ப்பிக்க வேண்டும். ஒரு வேளை, ஒரு தனிநபரால் ஒன்றுக்குமேற்பட்ட விண்ணப்பம் சமா்ப்பிக்கப்படுமேயானால் அவை ஒன்றாக்கப்பட்டு,கம்ப்யூட்டர் முறையிலான குலுக்கல் கணக்கிற்காக ஒரே விண்ணப்பமாககருதப்படும். அப்படிப்பட்ட நிலையில், மற்ற அனைத்துவிண்ணப்பங்களுக்காக பெறப்பட்ட விண்ணப்ப கட்டணம் பிடித்து வைத்துக்கொள்ளப்படும்.

c. இருப்பினும், விண்ணப்பதாரர்கள், வெவ்வேறு அமைவிடங்களுக்காக விண்ணப்பிக்கலாம். ஒவ்வொரு அமைவிடத்திற்கும் விண்ணப்பிப்பதற்காக, தனியான ஆன்லைன் விண்ணப்ப படிவங்கள், பொருந்தக்கூடிய கட்டணத்துடன் கூடியதாக சமா்ப்பிக்கப்பட வேண்டும்.

d. விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட ஆவணத்தில் அளித்துள்ள அல்லது விண்ணப்பத்தினைத் தொடா்ந்து வேறு எந்த கட்டத்திலும் ஆவணத்தில் வழங்கப்பட்ட கூற்றுகள் தகுதியைப் பாதிக்கும் விதத்தில் சரியில்லாததாகவோ, தவறானதாகவோ, மறைக்கப்பட்டிருப்பதாகவோ, பொய்யானதாகவோ இருப்பதாக கண்டறியப்பட்டால் எவ்வித காரணமுமின்றி விண்ணப்பத்தை நிராகரிக்கும் உரிமை நிறுவனத்திற்கு உண்டு. ஒரு வேளை விண்ணப்பதாரர், LPG விநியோகஸ்தராக நியமிக்கப்பட்டிருந்தால் அதை ரத்து செய்யும் உரிமை மட்டுமல்லாமல் விண்ணப்பக் கட்டணம்/செலுத்தப்பட்ட டெபாசிட்டை பிடித்தம் செய்யவும் அந்தந்த நிறுவனத்திற்கு உரிமை உண்டு. இது போன்ற தருணங்களில் சம்பந்தப்பட்ட ஆயில் நிறுவனத்திடம் விண்ணப்பதாரர்/விநியோகஸ்தர் எவ்வித இழப்பீடு கோர முடியாது.

e. இது ஒரு LPG விநியோகஸ்தர் நியமனத்திற்கான விண்ணப்பம் கோரும் அறிவிப்பு மட்டுமே. எந்தவிதமான விநியோக உரிமை அளிக்கும் ஆவணம் அல்ல என்பதனை அறியவும்.

f. எல்லா தொடர்புகளும் **www.lpgvitarakchayan.in** என்ற இணையதளத்தின் வழியாக மின்னஞ்ல் (email)/குறுந்தகவல் (SMS) வழியாக விண்ணப்பதாரருடைய பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரி (email address)/கைபேசிக்கு அனுப்பப்படும்.

g. இது முற்றிலும் ஒரு வர்த்தகம் சம்பந்தப்பட்ட விளம்பரம், ஆயில் நிறுவனத்தில் வேலை நியமனத்துக்கான விளம்பரம் அல்ல என்பதை அறியவும். இத்தொழில் பொதுவான வர்த்தக ஏற்ற இறக்கத்திற்கு உட்பட்டது. எந்தவிதமான உறுதியான வருமானத்திற்கோ, லாபத்திற்கோ உத்திரவாதம் இல்லை.

h. ஆங்கில/பிராந்திய மொழி விளம்பரத்தில் எந்தவொரு வேறுபாடு காணப்படுமாயின், அதற்கான வழிமுறைகள்/குறிப்புகள் பிராந்திய மொழி விளம்பரத்திற்கேற்ப எடுத்துக் கொள்ள வேண்டும்.

i. **www.lpgvitarakchayan.in** என்ற இணையதளத்தில் உள்ள குறிப்பில் வேறுபாடு இருந்தால் பத்திரிக்கை விளம்பரத்தில் வெளியிடப்பட்ட விவரங்கள் அடிப்படையாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

j. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் மற்றும் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் விண்ணப்பதாரருடைய வங்கி கணக்கு/Credit Card/Debit Card-ல் கழிக்கப்பட்டு மேற்கண்ட நிறுவனங்களின் வங்கிக் கணக்குகளுக்கு மாற்றப்படாத தொகைக்கு நிறுவனங்கள் பொறுப்பேற்காது.

k. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் மற்றும் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் விண்ணப்பதாரர் இணையதள Internet Banking / Card Card / Debit Card மூலம் செலுத்தும் அதிகத் தொகைக்கும் அதனை திரும்பச் செலுத்துவதற்கும் எந்தவொரு பொறுப்பேற்காது.